2006 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வளாகத்தில் இருக்கின்ற சிலை குறித்து அரசு எந்த முடிவும் எடுக்க முடியாது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85, திரு. வேல் முருகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

85—

நியாய விலைக் கடை

*** 35150—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, 1-வது வார்டில் ஒரு நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, 1-வது வார்டில் 284 குடும்ப அட்டைகள் உள்ளன. இவை பி.சி.எம்.எஸ். 8 மற்றும் பி.சி.எம்.எஸ். 9 என்ற கடைகளில் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகள் பண்ருட்டி தொகுதி 1-வது வார்டிலிருந்து ½ கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளதால் இந்த வார்டில் தனிக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி நகரில் சுமார் 85,346 பொது மக்கள் வாழ்கின்றார்கள். 1-வது வார்டில் 1,187 ரேஷன் அட்டைகள் இருக்கின்றன. பக்கத்து வார்டுகளில் சென்று அந்த மக்கள் ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு மிகச் சிரமப்படுகின்றார்கள். அங்கு பெரும்பான்மையாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற காரணத்தினால், கிராமப்புறங்களில் இருப்பதுபோல நகர்ப்புறங்களிலும் 250 கார்டுகள் உள்ளவர்களுக்குத் தனிக் கடையாகப் பிரித்துத் தருவதற்கும், அல்லது ஆயிரம் கார்டுகளுக்கு மேல் இருக்கின்ற காரணத்தினால் ஒரு முழு

நேரக் கடை வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள் சொல்லுகிற 1–வது வார்டில் 284 குடும்ப அட்டைகள்தான் உள்ளன. அந்த 284 குடும்ப அட்டைகளும் அரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இரண்டு கடைகளுக்குத் தனியாகப் பிரித்து உணவுப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல் முருகன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகப்பன் தெரு, ஜாகீர் உசேன் தெரு, சிவன்கொடை தெரு, மாரியம்மன் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய ஐந்து தெருக்களில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அந்த மக்கள் தங்கள் குழந்தைகளைக் கல்விக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லும்போது அல்லது தங்களுடைய வேலைகளுக்குச் செல்லும்போது அவர்கள் அந்த ரேஷன் கார்டுகள்மூலம் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட கடையில்தான் வாங்க வேண்டும் என்று அங்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆதலால், அந்தப் பகுதி மக்களுக்குத் தமிழக அரசினுடைய ரேஷன் கடைகள்மூலம் வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளையும் easy–யாகப் பெறுகின்ற வகையில் அந்த மக்களுக்கு ஏற்படுத்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்தில் வெள்ளிக்கிழமை தவிர, அனைத்து நாட்களும் கடைகள் திறந்திருக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி, வெள்ளிக்கிழமை தவிர, அனைத்து நாட்களிலும் அந்தந்தப் பகுதிகளில் இணைக்கப்பட்டிருக்கிற குடும்ப அட்டைகளைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ்.

2006 ஜனவரி 23]

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளைத் திறப்பதற்கான உரிய தகுதிகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே கொண்டாபுரம், சக்கரமல்லூர் என்கின்ற இரண்டு கிராமங்களிலே பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று கடந்த நான்கே முக்கால் ஆண்டு காலம் நான் முயற்சித்தும், இதுவரையிலே அவை திறக்கப்படவில்லை. தற்போதுதான் அரசு அதிகாரிகள், அரசுச் செயலாளருக்குக் கடிதம் எழுதி இருப்பதாகவும், அதிலே அரசு விதிகளைத் தளர்த்தி கடையைத் திறக்க ஆவன செய்யப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அரசினுடைய விதிமுறைகளை மிக விளக்கமாக இங்கே அவையிலே அறிவிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடைகள் நடத்துவதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன:

இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது இரண்டு கிலோ மீட்டர் இருக்க வேண்டும். பகுதிநேர அங்காடி அமைவதற்கு வாடகை இல்லாமல் இலவசமாகக் கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். தாய் அங்காடியின் விற்பனையாளரே பகுதிநேர நியாய விலைக் கடையையும், வாரத்தில் குறைந்தது 3 நாட்களாவது கவனித்துக்கொள்ள வேண்டும். பகுதிநேரக் கடைக்கு அரசு மானியம் எதுவும் வழங்காது. பகுதிநேரக் கடையில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடையை நடத்தும் கூட்டுறவுச் சங்கம் எந்தவிதமான செலவினத்தையும் பகுதிநேர நியாய விலைக் கடை நடத்துவதற்காகக் கோரக் கூடாது. மேற்கண்ட வரையறைகளுக்குட்பட்டு, கோரப்படுகிற பகுதிநேர நியாய விலைக் கடைகள் வழங்கப்படுகின்றன. இதிலிருந்து விலக்குப் பெறவேண்டும் என்றால், அரசுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பி, விலக்குப் பெற்றும் பகுதிநேரக் கடைகளைத் திறந்துகொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிநேரக் கடைகள் -- இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக இருக்கிற கடைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித்

தலைவர்களே அவர்களின் நேரடிப் பார்வையிலே செய்துகொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். அது தற்போது நடைமுறையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய சிறப்பு ஆணையை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்ற தகவலைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

86—

நவீனக் கழிப்பறைகள்

***5580—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை ரேஞ்சு பகுதி அருள்மிகு சொரிமுத்தையனார் கோயிலுக்கு நவீனக் கழிப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியில் புதிய கட்டடங்கள் கட்ட உச்ச நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன் இந்திய அரசின் அனுமதி பெற வேண்டும் என்பதால், திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை ரேஞ்சு பகுதி அருள்மிகு சொரிமுத்தையனார் கோயிலுக்கு நவீனக் கழிப்பறைகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சக்திவேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துக்களின் முதல் எழுத்தான 'அ' கரத்தையும், கடைசி எழுத்தான 'ன' கரத்தையும் தன் பெயரில் கொண்ட தமிழ்க் கடவுள் அகத்தியன் (ர்) வாழ்ந்த பொதிகை மலையில், காரையார் அணைக்குக்கீழ், தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள மிகவும்